# சுவாமி தயானந்தா கலை & அறிவியல் கல்லூரி

## மஞ்சக்குடி

பேரா.ப. இராஜேஷ்வரி

தமிழ்த்துறை

**பாடத் தலைப்பு** – இலக்கணம், தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை.

பாடத் தயாரிப்பு

பேரா.ப. இராஜேஷ்வரி

**அலகு - 1**

# தமிழ் இலக்கிய இலக்கண வரலாறு அறிமுகம்

## I) இலக்கணம்

## அ. 1. தொல்காப்பியம்

தமிழரின் நாகரிகத்தைப், பண்பாட்டை பறைசாற்றுவதோடு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழன் நாகரிகமாக வாழ்ந்தான் என்பதற்குச் சான்றாதாரமாகக் கிடைக்கும் நூலே தொல்காப்பியமாகும். தமிழரின் இலக்கிய இலக்கண அறிவுக்குக் கட்டியம் கூறும் நூலாகத் தொல்காப்பியம் இன்றுவரை திகழ்ந்து கொண்டிருக்கிறது.

### நூல் பற்றிய மரபுக் குறிப்புகள்

நூல்பெயர் : தொல்காப்பியம்

நூலாசிரியர் : தொல்காப்பியர்

பிறந்த குடி : காப்பியக் குடி

குரு : அகத்தியர் தலை மாணவர்

காலம் : தொல்காப்பியரின் காலம் குறித்து இடையே பல்வேறு கருத்துக்கள் உள்ளன.

| | | |
|---|---|---|
| 1. கி.மு 5200 | வெள்ளைவாரணர் | தமிழ் இலக்கிய வரலாறு பக் - 127 |
| 2. கி.மு.3500 | மறை மலையடிகள் | மாணிக்கவாசகர் வரலாறும் காலமுடும் பக் 595 |
| 3. கி.மு. 2000 | நா.சு.சுப்பிரமணிய பிள்ளை | இலக்கிய வரலாறு ப.67 |
| 4. கி.மு. 1000 | சோமசுந்தர பாரதியார் | கலைக் களஞ்சியம் தொகுதி - 6, ப.217 |
| 5. கி.மு.7 -ஆம் நூற்றாண்டு | தேவநேயப் பாவாணர் | தென்மொழி (இலக்கிய இதழ் இயல் இசை -1) |
| 6. கி.மு. 3 -ஆம் நூற்றாண்டு | வி.வி.ஆர்.தீட்சிதர் | - |
| 7. கி.மு.5 -ஆம் நூற்றாண்டு | டாக்டர் முவரதராசனார் | கலைக் களஞ்சியம் தொகுதி - (ப-479) |

| | | |
|---|---|---|
| 8. கி.மு 4 - ஆம் நூற்றாண்டு | எம்.சீனிவாச ஐயங்கார் | Tamil Studies P.117 |
| 9. கி.மு.3 ஆம் நூற்றாண்டு | கே.ஜி சங்கரையர் | செந்தமிழ்த் தொகுதி 15, ப.648 |
| 10. கி.மு.145 - க்கு முற்காலத்தவர் | ரா.இராகவையங்கள் | தமிழ் வரலாறு ப.260 |
| 11. கி.பி முதலாம், இரண்டாம் நூற்றாண்டு | பி.டி. சீனிவாச ஐயங்கள் | History of Tamikls P.70 |
| 12. கி.பி - 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் | தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் | சமணத் தமிழ் இலக்கிய வரலாறு ப.25 |
| 13. எஸ்.வையா புரிப்பிள்ளை | கி.பி. 4 அல்லது 5 - ஆம் நூற்றாண்டு | தமிழ்ச்சுடர் ப.3 |
| 14. கி.பி. 5 - ஆம் நூற்றாண்டு | கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி | - |
| 15. கி.பி - 6 ஆம் நூற்றாண்டு | கே.என். சிவராஜ பிள்ளை | கி.பி 5 - ஆம் நூற்றாண்டு |
| 16. ------------------- | ------------------------------------- | |
| 17. ------------------- | ------------------------------------- | |
| 18. ------------------- | ------------------------------------- | |
| 19. கி.மு 4200 | இறையனார் அகப் பொருள் நக்கீரர் உரைப்படி | - |

தொல்காப்பியரின் சமயம் = தொல்காப்பியரின் காலத்தைப் போன்று அவரின் சமயம் குறித்தும் ஏராளமான கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. அவை

| வ. எண் | ஆசிரியர் | நூல்பெயர் | சமயம் |
|---|---|---|---|
| 1. | சிதம்பரம் இராமலிங்கம் பிள்ளை | தொல்காப்பியர் சரித ஆராய்ச்சி | சித்தாந்த சைவம் |

| | | | |
|---|---|---|---|
| 2. | டாக்டர் பர்ணல் | வடமொழி வியாகரணம் | பௌத்தர் அல்லது ஜைனா |
| 3. | பேராசிரியர் எஸ். வையாப்புரிப் பிள்ளை | தமிழ்ச்சுடர் மணிகள் ப.25 | சமணர் |
| 4. | தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் | சமணத் தமிழ் இலக்கிய வரலாறு, ப.19 | சைனர் என்றோ சைனர் அல்லர் என்றோ உறுதியாகக் கூற முடியாது |
| 5. | ர.இராகவையங்கார் | தமிழ் இலக்கிய வரலாறு | வேத வழக்கொடு பட்ட நெறியினர் |

## நூல் அமைப்பு

தொல்காப்பியம் மூன்று முக்கியப் பிரிவுகளை உடையதாகும். ஒவ்வொருப் பிரிவும் 'அதிகாரம்' என்று அழைக்கப்படுகிறது. அவை

1. எழுத்ததிகாரம்
2. சொல்லதிகாரம்
3. பொருளதிகாரம்

ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களாகப் பகுக்கப் பட்டுள்ளது. தொல்காப்பிய நூற்பாக்களை ஒரு சில உரையாசிரியர்கள் சேர்த்தும் பிரித்தும் பயன்படுத்தியுள்ளதாலும் பெரும்பாலான அறிஞர்களின் கருத்துப்படி 1610 நூற்பாக்களை உடையதாகும்.

| வரிசை எண் | அதிகாரம் | இயல் பருப்புகள் | நூற்பாக்கள் |
|---|---|---|---|
| 1. | எழுத்ததிகாரம் | நூன் மரபு | 33 |
| | | மொழி மரபு | 49 |
| | | பிறப்பியல் | 20 |
| | | புணரியல் | 39 |
| | | தொகை மரபு | 29 |
| | | உருபியல் | 30 |
| | | உயிர் மயங்கியல் | |

| | | | |
|---|---|---|---|
| | | புள்ளி மயங்கியல் | |
| | | குற்றியலுகரப் புணரியல் | |
| 2. | சொல்லதிகாரம் | கிளவியாக்கம் | 61 |
| | | வேற்றுமையியல் | 22 |
| | | வேற்றுமை மயங்கியல் | 33 |
| | | விளி மரபு | 36 |
| | | பெயரியல் | 43 |
| | | வினையியல் | 50 |
| | | இடையியல் | 47 |
| | | உரியியல் | 99 |
| | | எச்சவியில் | 66 |
| 3. | பொருளதிகாரம் | அகத்திணையியல் | |
| | | புறத்திணையியல் | |
| | | களவியல் | |
| | | கற்பியல் | |
| | | பொருளியல் | |
| | | மெய்ப்பாட்டியல் | |
| | | உவமவியல் | |
| | | செய்யுளியல் | |
| | | மரபியல் | |

தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரப் பிரிவுகளையும் உரையாசிரியர்கள் வெவ்வேறு பெயர்களால் குறிப்பிட்டுச் சொல்கின்றனர். அவை

இளம்பூரணர் =

பேராசிரியர் = சூத்திரம் ஒத்து படலம் என்னும் மூன்றும் அடங்கிய பிண்டம் தொல்காப்பியம் என்பார்.

கல்லாடர் =

*நச்சினார்க்கினியர் = தொல்காப்பியம் மூன்றுறுப்பு அடக்கிய பிண்டம் என்பார்.*

## நூற்பாக்களின் எண்ணிக்கை

*தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரங்களிலும் காணப்படுகின்ற நூற்பாக்கள் உரையாசிரியர்களின் உரைப்போக்கிற்கு ஏற்ப வகுத்தும், தொகுத்தும், பகுத்தும் கூறியுள்ளனர். தொல்காப்பிய நூற்பாக்களின் எண்ணிக்கையை மூன்று பழம் வெண்பாக்கள் எடுத்துக் கூறுகின்றன. எழுத்ததிகார நூற்பாக்களின் எண்ணிக்கையை,*

**'எழுத்ததிகாரத்துச் சூத்திரங்க ளெல்லாம்**
**ஒழுக்கிய ஒன்பதோத் துள்ளும் - வழுக்கின்ற**
**நானூற்றிருநாற்பாண் மூன்றென்று நாவல்கள்**
**மேனூற்று வைத்தார் விரித்து'**

*என்று --------- அஃதாவது 483 நூற்பாக்களை உடையது எழுத்ததிகாரமாகும்.*

*சொல்லதிகார நூற்பாக்களின் எண்ணிக்கையை*

**"தோடவிழ்பூங் கோதாய் சொல்லதிகா ரத்தூள்**
**கூடிய ஒன்பதியற் கூற்றிற்கும் - பாடமாம்**
**நூனூற் றறுபத்து நான்கேநன் னூற்பாக்கள்**
**கோனூற்று வைத்த குறி"**

*என்று கூறுகிறது. அஃதாவது 464 நூற்பாக்களை உடையது சொல்லதிகாரமாகும்.*

*பொருளதிகார நூற்பாக்களின் எண்ணிக்கையை*

**'பூமலிமைன் கூந்தால் பொருளியலின் சூத்திரங்கள்**
**ஆவவறு நூற்றறுபத் தைந்தாகும் - மூவகையால்**
**ஆயிரத்தின் மேலும் அறுநூற்றுப் பஃதென்ப**
**பாயிரத்தொல் காப்பியங்கற் பார்'**

*என்று கூறுகிறது. அஃதாவது 665 நூற்பாக்களை உடையதாகும்.*

*மூன்று வெண்பாக்களிலும் முறையே கூறப்பட்டுள்ள நூற்பாக்களின் எண்ணிக்கை 483+464+664 = 1612 ஆகும். இருப்பினும் மூன்றாவது வெண்பாவில் "மூவகையால் ஆயிரத்தின் மேலும் அறநூற்றுப் பஃதென்ப" என்று அடிகளில் 1610 நூற்பாக்களை உடையது என்று கூறுகிறது.*

*இளம்பூரணரும், நச்சினார்க் கினியரும் 'எழுத்ததிகாரம் 483 நூற்பாக்களை உடையது என்றும் கூறுகின்றனர்.*

*சொல்லதிகாரம் நூற்பாக்களின் எண்ணிக்கையை மாற்றி மாற்றி தொகுத்தும் பகுத்தும் கூறியுள்ளனர்.*

*இளம்பூரணர் = 456 நூற்பாக்கள்*

*சேனாவரையர் = 463 நூற்பாக்கள்*

*நச்சினார்க்கினியர் = 464 நூற்பாக்கள்*

*தெய்வச் சிலையார் = 453 நூற்பாக்கள்*

*பொருளதிகார நூற்பாக்களின் எண்ணிக்கையையும்*

*இளம்பூரணர் = 656 நூற்பாக்கள்*

*நச்சினார்க்கினியர் =*

*பேராசிரியர் =*

*எனவே தொல்காப்பிய உரையாசிரியர்களின் உரை மரபுப் படி 1595 முதல் 1612 வரை எண்ணிக்கையால் மாறுபடுகின்றது.*

## எழுத்ததிகாரம்

*தொல்காப்பிய எழுத்ததிகாரம் ஒன்பது இயல்களையும், 483 நூற்பாக்களையும் உடையதாகும். எழுத்தின் வகையினை*

**'அகரம் முதல் னகரம் இறுவாய்**
**முப்பஃது என்ப'**

*என்று கூறுகிறார். எழுத்துக்களின் பிறப்புகளை எடுத்துக் கூறும் பிறப்பியலில்*

**"உந்தி முதலா முந்துவளித் தோன்றித்**
**தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் திலைகுப்**
**பல்லும் இதழும் நாவும் மூக்கும்**
**அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்**
**----------------------------------------**
**பிறப்பின் ஆக்கம் வேறுவேறு இயல**
**திறப்படத் தெரியும் காட்சி யான"**

*என்று கூறுகிறது. மொழியியலார் இன்று வியந்து போற்றும் அளவில் எழுத்துக்களின் பிறப்பினை வரையறுத்துக் கூறுகிறது.*

## சொல்லதிகாரம்

*சொல்லதிகாரம் ஒன்பது இயல்களையும், 463 நூற்பாக்களையும் உடையதாகும். சொல்லதிகாரம் சொற்களின் அமைப்பியல் சொற்களின் வகைகள் வேற்றுமைகள் மயங்கி வரும் முறைகள், நான்கு வகையான சொற்களையும் எடுத்துக் கூறுகிறது.*

"எல்லாச் சொல்லும் பொருள் குறித் தனவே"

என்றும், மூன்று வகையான காலத்திணை

"காலந் தாமே மூன்றென மொழிப"

என்று எடுத்துக் கூறுகிறது. சொற்கள் புணரும் முறையில் ஏற்படும் மாற்றங்களை ஆராயும் ஆய்வாளர்களுக்கு சொல்லதிகாரம் ஊன்று கோலாக விளங்கும்.

## பொருளதிகாரம்

பொருளதிகாரம் ஒன்பது இயல்களையும், 656 நூற்பாக்களையும் உடையதாகும். ஐந்திணைகளையும், திணைகளின் முதல், கரு, உரிப் பொருள்களையும், அவற்றிற்குரிய புறப்பொருள்களையும் அழகுற விளக்குகிறது. இல்லற வாழ்விற்குரிய களவியல், கற்பியல், பொருளியல் சார்ந்த நிகழ்வுகளையும் எடுத்துக் கூறுகிறது.

"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
"முற்படக் கிளந்த எழுதிணை என்ப"
"வெட்சிதானே குறிஞ்சியது யுறனே
"வஞ்சிதானே முல்லையது புறனே"
"உழிஞைதானே மருதத்துப் புறனே"
"தும்பைதானே நெய்தலது புறனே"
"வாகை தானே பாலையது புறனே"

என்று அகத்திற்கும், புறத்திற்கும் உள்ள திணைகளைக் கூறுகிறது. பழந்தமிழர்களின் வாழ்வியலை அழகுற எடுத்துக் கூறும் இயலே பொருளதிகாரமாகும். செய்யுள்கள் பாடும் முறை, செய்யுள்களின் வகைகள் செய்யுளைப் பாடும் உத்தி முறைகளை விரிவாக எடுத்துக் கூறும் மனித வாழ்வில் உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிக் கூறுகளை மெய்ப்பாட்டியில் எடுத்துக் கூறுகிறார். உயிர்களின் வகைகள் ஆண், பெண் விலங்குகளின் இளமைப் பெயர்களை விளக்கும் இயலாக மரபியலை அமைக்கிறார்.

## தொல்காப்பியம் - சிறப்பியல்புகள்

உலக மொழிகளில் உள்ள இலக்கண நூற்கள் அனைத்தும் எழுத்திற்கும், சொல்லிற்கும் மட்டுமே இலக்கணத்தை எடுத்துக் கூறுகிறது. தமிழ் மொழி மட்டுமே வாழ்வியலுக்குத் தேவையான பொருளியலுக்கும் இலக்கணம் கூறும் பொருளதிகாரத்தை எடுத்துக் கூறுகிறது. எழுத்துக்களின் பிறப்புக்களை எடுத்துக் கூறும் எழுத்ததிகாரத்தின் பிற்பியல் அமைப்பு முறை மொழியியல் அறிஞர்களே வியந்து கூறும் அளவிற்கு இன்றுவரை திகழ்கிறது.

# 2. இறையனார் அகப்பொருள்

இறையனார் அகப்பொருள் என்னும் தமிழ் இலக்கண நூல் அகப்பொருள் இலக்கணம் கூறும் நூலாகும் இந்நூலை களவியல் நூல் என்றும், இறையனார் களவியல் என்றும் அழைப்பர். அகப்பொருள் பற்றிய இலக்கணத்திலும் களவி வாழ்க்கையின் இலக்கணத்தை எடுத்துக் கூறுவதால் இந்நூலை 'களவியல்' என்றழைத்தனர் எனலாம்.

## நூல் மரபுக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | இறையனார் அகப்பொருள் |
| நூலாசிரியர் | : | இறையனார் |
| காலம் | : | கி.பி முதல் நூற்றாண்டு |
| நூற்பா | : | 60 நூற்பா |
| சமயம் | : | சைவம் |
| நூல் பிரிவு | : | இரண்டு (களவியல் = 33, கற்பியல் = 27) |
| பதிப்பு | : | கி.பி 1883 சி.வை. தாமோதனம் பிள்ளை, இறையனார் அகப்பொருள் மூலமும் உரையும். |

கி.பி 1889 யாழ்ப்பாணம் சி.வை. தாமோதனம் பிள்ளை (பதி) இறையனார் அகப்பொருள் மூலமும் உரையும்.

## நூலாசிரியர்

இந்நூலாசிரியர் இறையனார் ஆவார். இந்நூல் உரையில் இந்நூல் செய்தார் யாரோ எனின் 'மால்வரை புரையும் மாடக் கூடல் ஆலவாயில் பால் புரை பசுங்கதிர்க் குழவித் திங்களைக் குறுங்கண்ணியாகவுடைய அழலவிர் சோதி அருமறைக் கடவுள் என்று கூறுகிறது. இந்நூலாசிரியான இறையனாரை 'மதுரை ஆலவாயன் சோமசுந்தரக் கடவுள்' என்றும் அழைப்பர். இந்தக் கூற்று ஆய்வுக்குரியதாகும். பெரும்பாலான உரையாசிரியர்களின் கூற்றுப் படியே இந்நூலாசிரியரை இறையனார் என்றே உடன்பட்டுக் கூறுகிறோம்.

தொல்காப்பியம் கூறும் பொருளதிகாரத்தில் உள்ள அகத்திணைப் பொருள்களை நன்கு கற்றுணர்ந்த புலவர் ஒருவரால் களவியலையும், கற்பியலையும் சுருக்கமாக எடுத்துக் கூறும் நூலே களவியல் அகப்பொருள்

*ஆகும். இந்நூலாசிரியர் கடைச் சங்கக் காலத்தில் வாழ்ந்ததாகக் கூறப்படும் நக்கீரருக்குச் சிறிது காலத்திற்கு முற்பட்டவராக இருக்கலாம் என்பது அறிஞர்களின் கருத்தாகும்.*

### காலம்

*இந்நூலாசிரியர் கடைச் சங்கப் புலவரான நக்கீரரின் காலத்திற்கு சிறிது முற்பட்டவராக இருப்பதால் கி.மு முதல் நூற்றாண்டு அல்லது கி.பி முதல் நூற்றாண்டாக இருக்கலாம்.*

### சமயம்

*இந்நூலாசிரியரான இறையனாரை மதுரை ஆலவாயன் சோமசுந்தரக் கடவுள் என்ற சிறப்புப் பெயரால் அழைப்பதாலும், இந்நூலுக்கு உரையெழுதிய நக்கீரர். கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறை தும்பி பாடலைப் பாடியவராகக் கருதப் படுவதாலும் இந்நூல் ஆசிரியர் சைவ சமயம் சார்ந்தவராக இருக்கலாம்.*

## களவியல் தோற்ற வரலாறு

*பாண்டிய நாடு அக்காலத்தில் பன்னிரண்டு ஆண்டுகள் பஞ்சத்தால் வாடியது. அரசன் அறிஞர்களை எல்லாம் அழைத்து, "நீயிர் நுமக்கு அறிந்தவாறு புக்கு, நாடு நாடாயின ஒன்று" என்று கூறி வளமான நாட்டிற்கு வழியனுப்பி வைத்தான். பின்னர் பன்னிரண்டு ஆண்டு கழித்து மழை அதிகமாகப் பொழிந்து பஞ்சம் தீர்ந்தது. அரசன் "நாடு நாடாயிற்றாகலின் நூல் வல்லாரைக் கொணர்க" என்று எல்லா திசைகளுக்குப் தூதரை அனுப்பி அறிஞர்களைக் கொண்டு வந்தான். மீண்டும் வந்த புலவர்கள் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், யாப்பதிகாரம் இயற்றக் கூடிய புலவர்கள் கிடைத்தனர். பொருளதிகாரம் இயற்ற புலவர் கிடைக்கவில்லை என்று உளம் வருந்தியபோது, 'மதுரை ஆலவாயில் அழல் நிறக் கடவுள் சிந்திப்பான். என்னை பாவம் அரசர்க்குக் கவற்சி பெரியதாயிற்று அது தானும் ஞானத்திடைய தாகலான் யாம் அதனைத் தீர்க்கற்பாலம் என்று இவ்வறுபது சூத்திரத்தை யஞ் செய்து மூன்று செப்பிதழகத்து எழுதிப் பீடத்தின் கீழிட்டான்' என்று உரைநூல் கூறுகிறது.*

## நூல் அமைப்பு

*இறையனார் அகப்பொருள் இரண்டு பிரிவுகளை உடையதாகும். அவை*

*1. களவியல்*

*2. கற்பியல்*

*களவியலில் 33 நூற்பாக்களும், கற்பியலில் 27 நூற்பாக்களுமாக 60 நூற்பாக்களை உடையதாகும். இந்நூல் அகப்பொருளின் இலக்கணத்தைச் சுருக்கி உரைக்கிறது. இந்நூலில் ஒருவரியினை உடைய நூற்பாக்கள் 15 உள்ளன. இரண்டு வரி நூற்பாக்கள் உள்ளன. மூன்றுவரி நூற்பாக்கள் 12 உள்ளன. நான்குவரி முதல் 10 வரி வரையுள்ள நூற்பாக்கள் உள்ளன. நூற்பாக்கள் அனைத்தும் எளிய சொற்பதங் களுடன் மிகுந்த பொருட் செறிவுடைய சொற்களாக உரைக்கப் பட்டுள்ளன.*

*அம்பலும் அலரும் களவு (நூ. 22) பொருள் பொதிந்த இரத்தினச் சுருக்கமான நூற்பாக்களாகவே உள்ளன. பன்னிரண்டாவது நூற்பா மட்டுமே பத்துவரி நூற்பாக் காணப்படுகிறது.*

## களவியல்

*களவியல் 33 நூற்பாக்களை உடையதாகும். களவு, புணர்ச்சி, கூற்றுக்குரியவர் குறியிடம் இருவகைக் குறிகள், வரைவின் நீட்டம் அறத்தொடு நிற்றல், போன்றவை பற்றி எடுத்துக் கூறுகிறது.*

அன்பின் ஐந்திணைக் களவெனப் படுவது
அந்தனர் அருமறை மன்றல் எட்டனுார்
கந்தருவ வழக்கம் என்மனார் புலவர் (நூ.1)

'இரவுக் குறியே இல்வரை இகலாது (நூ. 15)
'களவு வெளிப்படா முன்னுற வரைதல்

களவு வெளிப்பட்ட பின்றை வரைதலென்று
ஆயிரெண் டென்ப வரைதல் ஆறே' (நூ. 24)

*என்று எளிமையான முறையில் எல்லோருக்கும் புரியும்படி இலக்கணம் கூறுகிறது.*

## கற்பியல்

*கற்பியல் 27 நூற்பாக்களை உடையதாகும். கற்பின் இலக்கணம், பிரிவின் வகைகள் கற்பிற்குரிய கூற்றின் வகையினை எடுத்துக் கூறுகிறது.*

'கற்பினுள் துறவே கடிவரை வின்றே' (நூ.34)

'புகழும் கொடுமையும் கிழவோன்மேன' (நூ.45)

'களவு கற்பெனக் கண்ணிய ஈண்டையோ
உளநிகழ் அன்பின் உணர்ச்சி மேன (நூ. 60)

*என்று எளிமையாகவும், தெளிவாகவும் விளக்கப்படுகிறது.*

## களவியல் உரை

*இந்நூலுக்கு ஒரு சிறந்த உரையினை எழுதியவர் நக்கீரர் ஆவார். இவர் சங்க காலத்தில் வாழ்ந்த நக்கீரர் என்பர் இவரின் இயற்பெயர் 'கீரன்' என்றும் 'ந' என்ற இடைச்சொல் சிறப்புப் பொருளைப் பெற்று 'நக்கீரன்' என்று அழைக்கப்படலாயிற்று என்பர் பல இலக்கண ஆசிரியர்கள். இவ்வுரை நூல் தோன்றிய வரலாற்றை நூல் உரையுள்ளே கூறப்படுகிறது.*

*"மதுரைக் கணக்காயர் மகனார் நக்கீரனார் தம்மகனார் கீரங் கொற்றனார்க்கு உரைத்தார். அவர் இன்னாருக்கு உரைக்க இன்னார் இன்னாருக்கு உரைத்தார் எனக்கூறி இறுதியில் முசிறியாசிரியார் நில கண்டனார்க்கு உரைத்தான் என்று கூறப்பட்டுள்ளது. வாய்மொழி வழியாகவே பேசப்பட்டு வந்த உரை கி.பி 9-ஆம் நூற்றாண்டில் தான் நிலை பெற்றது என்பர். இவ்வுரையின் உதாரணச் செய்யுள்களாக பல பாடல்களாக கி.பி எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த நெடுமாறன் மீது பாடப்பட்டுள்ள பாண்டிக் கோவை நூலிந்து உதாரணச் செய்யுள்கள் கூறப்பட்டுள்ளதால் 'இவ்வுறை ஒன்பதாம் நூற்றாண்டில் நிலை பெற்றிருக்கும் என்ற கூற்றிற்கு வலு சேர்க்கும்.*

## உரையின் இயல்பு

*இவ்வுரை நூற்பாக்களுக்கு விரிவான உரையைத் தருகிறது. 'அம்பலும் அலரும் களவு' என்ற நூற்பா (22) விற்கு*

*"அம்பல் என்பது முகிழ்முகித்தல் அலர் என்பது சொல் நிகழ்தல்*
*அம்பல் என்பது சொல் நிகழ்தல் அலர் என்பது இல் அறிதல்*
*அம்பல் என்பது இல் அறிதல் அலர் என்பது அயல் அறிதல்*
*அம்பல் என்பது அயல் அறிதல் அலர் என்பது சேரி அறிதல்*
*அம்பல் என்பது சேரி அறிதல் அலர் என்பது ஊர் அறிதல்*
*அம்பல் என்பது ஊர் அறிதல் அலர் என்பது நாடு அறிதல்*
*அம்பல் என்பது நாடு அறிதல் அலர் என்பது தேயம் அறிதல்*
*அழகிய விளக்கம் தருகிறது*

*இந்நூலின் உரையே பழந் தமிழகத்தில் மூன்று சங்கம் இருந்தக் குறிப்பைத் தருகின்றன.*

**தலைச் சங்கம் இடைச் சங்கம் கடைச்சங்கம் என**
**மூன்று சங்கம் இரீஇயினார் பாண்டியர்**
**அவருள் தலைச் சங்கம் இருந்தார் அகத்தியனாரும்**

திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும் ---------
-----------------------------------------
அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தர மதுரை என்ப"

*என்று கூறுகிறது.*

## முச்சங்க வரலாறு

| | | |
|---|---|---|
| *முதல் சங்கம் இருந்த இடம்* | : | *கடல் கொண்ட தென்மதுரை* |
| *இருந்த கால அளவு* | : | *4440 ஆண்டுகள் (37 ஓ 120)* |
| *பாடிய புலவர்கள்* | : | *4449 பேர்* |
| | | *549 பேர்* |
| *கலிபாடிய அரசர்கள்* | : | *7* |
| *சங்கம் பேணிய அரசர்கள்* | : | *காய்சின வழுதி முதலாகக் கடுங்கோன் இறுதியாக 89 பேர்* |
| *பாடிய நூல்கள்* | : | *பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியா வரை முதலியன* |
| *தலைமையான இலக்கண நூல்* | : | *அகத்தியம்* |
| *புலவர்கள்* | : | *அகத்தியர், திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள், கன்றெறிந்த முருகவேள், முரஞ்சியூர் முடி நாகராயர், நிதியின் கிழவன் முதலானவர்கள்.* |

## இடைச் சங்கம்

| | | |
|---|---|---|
| *இடைச் சங்கம் இருந்த இடம்* | : | *கபாடபுரம்* |
| *இருந்த கால அளவு* | : | *3710 (37 ஓ 100)* |
| *பாடிய புலவர்கள்* | : | *3700 பேர்* |
| *சங்கப் புலவர்கள்* | : | *59 பேர்* |
| *சங்கம் பேணிய அரசர்கள்* | : | *வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறன் ஈராக 59 பேர்* |
| *பாடிய நூல்கள்* | : | *கலி, குருகு, வெண்டாரி, வியாழ மாலை அகவல் முதலியன* |
| *இலக்கண நூல்கள்* | : | *அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், இசை நுணுக்கம், பூத பூரணம்* |

| | | |
|---|---|---|
| புலவர்கள் | : | அகத்தியர், தொல்காப்பியர், இருந்தையூர்க் கருங்கோழி மோசி, வெள்ளூர்க்காப்பியன், சிறுபாண்டரங்கன், திரையல் மாறன், துவரைக் கோமான், கீரந்தை முதலானோர். |

**கடைச் சங்கம்**

| | | |
|---|---|---|
| புலவர்கள் | : | அகத்தியர், ெ |
| கடைச் சங்கம் நடைபெற்ற இடம் | : | உத்தர மதுரை |
| இருந்த கால அளவு | : | 1850 ஆண்டுகள் |
| பாடிய புலவர்கள் | : | 449 பேர் |
| சங்கப் புலவர்கள் | : | 49 பேர் |
| கவி பாடிய அரசர்கள் | : | 3 பேர் |
| சங்கம் பேணிய அரசர்கள் | : | முடத் திருமாறன் முதலாக உக்கிரப் பெழுவதி இறுதியாக 49 பேர் |
| பாடிய நூல்கள் | : | நெடுந்தொகை, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, நூற்றைம்பது கலி, எழுபது பரிபாடல், கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை முதலியன. |
| இலக்கண நூல்கள் | : | அகத்தியம், தொல்காப்பியம் |
| புலவர்கள் | : | சிறுமேதாவியர், சேந்தம் பூதனார், அறிவுடையரனார், பெருங்குன்றூர்க் கிழார், இளந்திருமாறன், மதுரை யாசிரியன் நல்லவந்துவனார், மதுரை மருதனிலிநாகனார், கணக்காயர் மகனார் நக்கீரனார் முதலானோர். |

இறையனார் அகப்பொருள் என்ற நூலும் அவ்வுரையின் மூலமும் அரிய வரலாற்றுச் செய்திகளையும், புராணக் குறிப்புகளையும் எடுத்துக் கூறுகிறது.

# 3. நம்பியகப் பொருள்

## நம்பி அகப்பொருள் விளக்கம்

தொல்காப்பியம் கூறும் அகப்பொருள் இலக்கணம் பற்றி விரிவாக எடுத்துக் கூறும் நூல் இதுவாகும். நாற்கவராச நம்பி அவர்களால் இயற்றப்பட்ட அகப்பொருள் இலக்கண நூலாக இருப்பதால் இந்நூல் நம்பியகப் பொருள் என்று அழைக்கப்படுகிறது. துறைவகையினை எடுத்துக் கூறும் சிறந்த நூலாக விளங்குகிறது.

## நூல் மரபுக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூல்பெயர் | : | அகப்பொருள் விளக்கம் |
| நூலாசிரியர் | : | நாற்கவிராச நம்பி |
| பிறந்த ஊர் | : | புளியங்குடி |
| இயற்பெயர் | : | நம்பி நயினார் |
| காலம் | : | கி.பி. 12 - ஆம் நூற்றாண்டின் இறுதி என்றும் கி.பி - 13 - ஆம் நூற்றாண்டின் முதல் பகுதி என்பர் |
| சமயம் | : | சமண சமயம் |
| நூல்பொருள் | : | அகப்பொருள் |
| நூற்பாக்கள் | : | 252 |
| பதிப்பு | : | 1. 1835 - தாண்டவராய் முதலியார் - அ.முத்து சாமிப் பிள்ளை (பதி) - அகப்பொருள் மூலமும் புறப்பொருள் வெண்பாமாலை மூலமும். |
| | | 2. 1854 - நரசிங்கபுரம் வீரசாமி முதலியார் (பதி) அகப்பொருள் மூலம் |
| | | 3. 1878 - வி.எஸ். வைத்தியலிங்கம் பிள்ளை (பதி) அகப்பொருள் மூலமும் விளக்கமும் |
| | | 4.1878 - ச.வயித்தியலிங்கம் பிள்ளை, க.சபாபதிப் பிள்ளை (பதி) அகப்பொருள் மூலமும் உரையும் |
| | | 5. 1879 - ஜெ. வைத்தியலிங்கம் - சி.சபாபதிப் பிள்ளை (பதி) அகப்பொருள் விளக்கம் |

*6.1886 - அ.இராமசுவாமிகள் (பதி) அகப்பொருள் விளக்க மூலம்*

*உரைகள் :*

*நூலாசிரியர் : இந்நூலாசிரியரின் இயற்பெயர் நம்பி நாயனார் ஆகும். இவர் ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி என்னும் நான்கு வகையான கவிகளையும் சிறப்பாகப் பாடுவதில் சிறந்தவராக விளங்கியதால் இவரை 'நாற்கவிராச நம்பி' என்று அழைக்கப்பட்டார். ஒரு சில ஆசிரியர் 'நம்பி' என்பது அரசு வழங்கிய சிறப்புப் பெயராகவும் இருக்கலாம் என்பர். சிறப்புப் பாயிரப் பாடலில்*

**உத்தமன் புளிங்குடி உய்யவந் தானெனும்**
**முத்தமி ழாசான் மைந்தனர், இத்தலத்து**
**இருபெரும் கலைக்கும் ஒருபெருங் குரிசில்**
**பாற்கடல் பல்புகழ் பரப்பிய**
**நாற்கவி ராச நம்பிஎன் பவனே**

*புளிங்குடி என்னும் ஊரில் வாழ்ந்த உய்யவந்தொனென்னும் முத்தமிழ் ஆசானின் மகன் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. இந்தவூர் பாண்டிய நாட்டில் உள்ள பொருநையாற்றங்கரையின் வட கரையில் உள்ளது என்று கூறுவர்.*

### சமயம்

*நாற்கவிராச நம்பி என்பவர் சமண சமயம் சார்ந்தவர் என்பதை சிறப்புப் பாயிரம் மூலம் அறிந்துகொள்ள முடியும்.*

**"மாந்தரும் தேவரும் வாழ்த்திரக் குடைக்கீழ்**
**ஏந்தெழில் அரிமான் ஏந்துபொன் னனைமிசை"**

### காலம்

*இந்நூலாசிரியரின் காலம் கி.பி 12 - ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி என்றும், பதிமூன்றாம் நூற்றாண்டின் முதல் பகுதி என்பதையும் சிறப்புப் பாயிரப் பாடல் மூலமும் சிறப்புப் பாயிர உரையின் மூலமாகவும் அறிந்து கொள்ளலாம்.*

**'தத்துவம் பகர்ந்தோன் சரணம் பொருந்திய**
**உத்தமன் புளிங்குடி உய்யவந் தானெனும்**
**முத்தமிழாசான் மைந்தன்'**

*என்று கூறுவதில் இருந்தும், சிறப்புப் பாயிர உரை விளக்கத்தில் "காலம் பாண்டியன் குலசேகரன் காலம் என்று குறிக்கப்பட்டுள்ளது. குலசேகர பாண்டியன் என்பவன் முதல் சடையவர்மன் குலசேகரனே ஆவான். அம்மன்னனின் காலம் கி.பி 1192 - 1266 வரை ஆகும். அதனால் இந்நூலாசிரியரின் காலமும் இதுவே ஆகும் எனலாம்.*

## நூல் அமைப்பு

*நம்பியகப் பொருள் ஐந்து இயல்களை உடையதாகும் அவை*

1. *அகத்திணையியல்*
2. *களவியல்*
3. *வரைவியல்*
4. *கற்பியல்*
5. *ஒழிபியல்*

*இந்நூல் 252 நூற்பாக்களை உடையதாகும்*

| வரிசை எண் | இயல்கள் | நூற்பாக்கள் |
|---|---|---|
| 1. | அகத்திணையியல் | 116 நூற்பாக்கள் |
| 2. | களவியல் | 54 நூற்பாக்கள் |
| 3. | வரைவியல் | 29 நூற்பாக்கள் |
| 4. | கற்பியல் | 10 நூற்பாக்கள் |
| 5. | ஒழிபியல் | 43 நூற்பாக்கள் |

*தொல்காப்பிய நூற்பாக்களின் எண்ணிக்கையில் உரையாசிரியர்களின் போக்கிற்கு ஏற்ப மாறுபடுவது போல நம்பியகப் பொருளிலும் நூற்பாக்களிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஒழிபியலில் 42, நூற்பாக்கள், 43 நூற்பாக்கள் என்று இரண்டு கணக்கீடுகளும், அகத்திணையியல் 117 என்றும் ஒழிபியலில் 41 நூற்பாக்கள் என்றும் ஒரு வெண்பா பாடல் எடுத்துக் கூறுகிறது.*

**"அகத்திணை நூற்றுப் பதினேழ் அடங்கா
மிகுத்தகள ஐம்பதுடன் மேல்நான்கு - இருந்த
வரைவிருபத் தொன்பஃது மன்னூல்கற் ஈரைந்து
உரைமொழிப நாற்பஃதோ ஒன்று"**

*உரையாசிரியர்கள் ஒரு சில நூற்பாக்களை இரண்டு நூற்பாவாகவும் இரண்டு நூற்பாக்களை ஒன்றாகவும் கூறியிருக்கலாம்.*

## நூல் பிரிவுகள்

*இந்நூல் தொல்காப்பியம் கூறும் அகப் பொருள் இலக்கணத்தையும், சான்றோர்களின் இலக்கியத்தையும் தழுவி இயற்றப் பட்டுள்ளது என்பதைத் தற்சிறப்பு பாயிரப் பாடல் மூலம் அறியலாம்.*

"தொல்காப் பியனருள் ஒல்காப் பெரும்பொருள்
அகப்பொருள் இலக்கணம் அகப்படத் தழீஇ
இகப்பரும் சான்றோர் இலக்கியம் நோக்கித்
தொகுத்துமறை நிறீகுச் சூத்திரம் வகுத்தாங்கு"

## அகத்திணையியல்

*அகத்திணையியல் 116 நூற்பாக்கள் உள்ளன. அகத்திணையின் இலக்கணம் அறத்தொடு நிலை, கற்பு, பிரிவு, வாயில்கள் பற்றி எடுத்துக் கூறுகிறது களவின் கண் நிகழும் புணர்ச்சியின் தன்மையினை எடுத்துக் கூறுகிறது*

"இயற்கைப் புணர்ச்சி இடந்தலைப் பாடு
பாங்கன் கூட்டம் பாங்கியின் கூட்டமென்று
உணர்த்தியே களவில் புணர்ச்சி நால்வகைத்தே" (நூ - 27)

## களவியல்

*களவியல் 54 நூற்பாக்கள் உள்ளன. களவியல் இலக்கணம், களவியலின் கிளவித தொகைகள், பற்றி எடுத்துக் கூறுகிறது. களவியல் என்பது*

"உளம்மலி காதல் களவு எனப்படுவது
ஒரு நான்கு வேதத்து இரு நான்கு மன்றலுள்
யாழோர் கூட்டத்து இயல்பினது எனப் (நூ. 117)

*என்று எடுத்துக் கூறுகிறது.*

## வரைவியல்

*வரைவியலில் 29 நூற்பாக்கள் உள்ளன. வரைவுமலிதல், உடன்போக்கு. கற்பொடு புணர்ந்த கவ்வை மீட்சி வரைதல் பற்றி எடுத்துக் கூறுகிறது. வரைதலின் இலக்கணம் பற்றி எடுத்து உறுகிறார்.*

"தன்னூர் வரைதலும் தன்மனை வரைதலும்
என்னும் இவ்விரண்டு ஒழித்து எவற்றினும் கிழவோன்
அந்தனர் சான்றோர் முன்னிட்டு அருங்கலம்
தந்து வரைதல் தகுதி என்ப"

## கற்பியல்

*கற்பியலில் 10 நூற்பாக்கள் உள்ளன. இவ்வியலில் கற்பின் இலக்கணம், கற்பிற்குரிய கிளவித் தொகைகள் பற்றியும் எடுத்துக் கூறுகிறது. கற்பின் இலக்கணத்தை*

"பொறபமை சிறப்பின் கற்பெனப் படுவது
மகிழ்வும் ஊடலும் ஊடல் உணர்த்தலும்
பிரிவும் பிறவும் மருவியது ஆகும்" (நூ. 200)

*என்று எடுத்துக் கூறுகிறது.*

## ஒழிபியல்

*ஒழிபியலில் 43 நூற்பாக்கள் உள்ளன. இவ்வியலில் அகப்பாட்டு உறுப்புகள், கூற்றிற்கு உரியவர், உள்ளுறை இறைச்சிப் பொருள், அதிகாரப் புறனடை போன்றவை பற்றியும் எடுத்துக் கூறுகிறது. ஒழிபின் வகையினை*

'ஒழிபு எனப்படுவது அகப்பாட்டு உறுப்பும்
வழுவும் அமைவும் தழுவியது ஆகும்' (நூ. 210)

*என்று எடுத்துக் கூறுகிறது.*

## உரையாசிரியர்

*இந்நூலின் உரையாசிரியரும் நாற்கவிராச நம்பியே ஆவார்.*

"அகப்பொருள் விளக்கம் என்று அதற்கொரு நாமம்
புலப்படுத்து இருளறப் பொருள்விரித்து எழுதினான்"

*என்ற சிறப்புப் பாயிர வரிகளின் மூலம் அறியலாம். இந்தவுரை கருத்துரையும், பொழிப்புரையும், விசேட உரைகயயும் உடையதாகும். இந்த உரையில் தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள் உரை, தஞ்சை வாணன் கோவை, ஐங்குறுநூறு குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு திணைமொழி ஐம்பது, ஐந்திணை ஐம்பது ஐந்திணை எழுபது, திணைமாலை நூற்றைம்பது போன்ற இலக்கியங்களி லிருந்தும் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.*

## தஞ்சைவாணன் கோவை

*நம்பியகப் பொருளை இலக்கணமாகக் கொண்டு இயற்றப்பட்ட தஞ்சை வாணன். கோவை இந்நூலுக்கு உதாரணச் செய்யுள்களாகக் காட்டப்படுகின்றன. இந்நூல் 425 செய்யுள்களையும், களவியல், வரைவியல், கற்பியல் என்னும் மூன்று பிரிவுகளை உடையதாகும். இந்நூலின் ஆசிரியர் பொய்யாமொழிப் புலவர் ஆவார். இந்நூல் கி.பி 13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இயற்றப்பட்ட நூலாகும்.*

# 4. புறப்பொருள் வெண்பாமாலை

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் புறப்பொருளைப் பற்றியும் அதன் இலக்கண வகையினையும் விரிவாக எடுத்துக் கூறும் நூல் புறப்பொருள் வெண்பாமாலையாகும். தொல்காப்பியர் கூறிய ஏழுவகையான புறத்திணைகளையும், பன்னிரண்டு புறத்திணைகளாக விவரித்துக் கூறுகிறது. கைக்கிளைப் பகுதியைத் தவிர்த்த மீதமுள்ள பதினோரு பகுதிகளும் வெண்பா யாப்பிலும் கைக்கிளைப் பகுதியிலும் மருட்பாவிலும் பாடப்பட்டுள்ளன.

## நூல் பற்றிய மரபுக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| நூல்பெயர் | : | புறப்பொருள் வெண்பாமாலை |
| நூலாசிரியர் | : | ஐயனாரிதனார் |
| காலம் | : | கி.பி 9 - ஆம் நூற்றாண்டு |
| நூலாசிரியர் மரபு | : | சேரமரபினர் |
| நூல்வகை | : | பன்னிருப் படலத்தின் வழி நூல் என்பர் |
| நூல்வகை | : | படலங்கள் = 12 |
| நூற்பாக்கள் | : | 19 சூத்திரங்கள்<br>361 - வெண்பாக்கள்<br>341 - கொளுக்கள்<br>1. இரண்டு கடவுள் வாழ்த்து செய்யுள்<br>2. ஒரு சிறப்புப் பாயிரச் செய்யுள் |
| சமயம் | : | ‘சைவ சமயம்’ என்று கூறுவர். தண்டவராய முதலியார் |
| பதிப்பு | : | 1. 1835 - அ.முத்துசாமிப்பிள்ளை<br>2. 1854 - நரசிங்கபுரம் வீரசாமி முதலியார் இயற்றமிழ் விளக்க அச்சுக்கூடம்<br>3. 1586 - அ.இராமசுவாமிகள், ஜீவரஷாமிர்ா, அச்சுக்கூடம் சென்னை.<br>4. 1895 - வே.சாமிநாதையர் (ப.ர்) வெ.நா ஜீபிலி அச்சுக்கூடம் சென்னை. |

| வ. எண் | துறையின் பெயர் | திணை | துறைகள் | கொளுக்கள் | வெண்பாக்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | வெட்சி | புறம் | 19 | 20 | 21 |
| 2. | கரந்தை | புறம் | 13 | 14 | 14 |
| 3. | வஞ்சி | புறம் | 20 | 25 | 25 |
| 4. | காஞ்சி | புறம் | 21 | 25 | 25 |
| 5. | நொச்சி | புறம் | 8 | 9 | 9 |
| 6. | உழிநை | புறம் | 28 | 32 | 32 |
| 7. | தும்பை | புறம் | 23 | 26 | 28 |
| 8. | வாகை | புறம் | 32 | 34 | 34 |
| 9. | பாடாண் | புறம் | 47 | 51 | 51 |
| 10. | பொதுவியல் | - | 37 | 45 | 45 |
| 11. | கைக்கிளை | - | 1 + 1 = 19 | 9+ 12 =21 | 21 |
| 12. | பெருந்திணை | - | 1 +1 + 1<br>(ஒழிபு = 1) | 19 + 18+ 21<br>37 + 1 = 38 | |

## நூல் ஆசிரியர்

புறப்பொருள் வெண்பா மாலையின் ஆசிரியர் ஐயனாரிதனார். சேர மரபினைச் சார்ந்தவர் என்பதை சிறப்புப் பாயிரப் பாடலும் ஒழிபியல் நூற்பாவின் குறிப்புகளாலும் அறிய முடிகிறது.

**“ஓங்கிய சிறப்பின் உலகமுழு தாண்ட**
**கனங்குலில் தடக்கை வானவர் மருமான்**
**ஐயனா ரிதனார் (சிறப்புப் பாயிரம்)**

ஐயனாரிதனார் என்னும் பெயர் திருவிடைக் கழிப் பகுதியைச் சார்ந்த குராஞ்சேரியிலுள்ள சாஸ்தாவின் பெயர் என்று குறிப்பிடுவர். ஒரு சில அறிஞர்கள் “ஐயனார்க்கு இனியன்” என்பதே ஐயனாரிதன் என்று மருவி வழங்கியிருக்கலாம் என்பர் சேர நாட்டில் இன்றும் சாஸ்தா கோவில்கள் ஏராளம் உள்ளன.

## நூலாசிரியர் காலம்

புறப்பொருள் வெண்பா மாலையில் இடம் பெற்றுள்ள பல வெண்பாக்களையும், ஒரு சில கொளுக்களையும் இளம்பூரணர்

அடியார்க்கு நல்லார், பேராசிரியர், பரிமேலழகர், நச்சினார்க்கினியோர் தங்களின் உரை நூலில் மேற்கோளாகக் கூறப்பட்டுள்ளதால் இவ்வுரையாசிரியர்களின் காலத்திற்கு முந்தியது என்று உறுதிபடக் கூறலாம் யாப்பெருங்கல விருத்தியுரையீலும் இந்நூலின் நூற்பாக்கள் மேற்கோளாகக் கூறப்படுவதாலே இந்நூலாசிரியரின் காலம் பற்றிய மூன்று கருத்தியல்கள் உள்ளன.

* ஒரு சில அறிஞர்கள் காலம் - கி.பி 6 - ஆம் நூற்றாண்டு
* ஒரு சில அறிஞர்கள் காலம் - கி.பி 7 - ஆம் நூற்றாண்டு
* ஒரு நில அறிஞர்கள் காலம் - கி.பி 8 - அல்லது 9ஆம் நூற்றாண்டு

## நூலமைப்பு

புறப்பொருள் வெண்பாமாலை பன்னிருப் படலம் என்ற புறப்பொருளின் வழிநூல் என்பதைச் சிறப்புப் பாயிரவரிகளான

**'பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த**
**பன்னிரு படலமும் பழிப்பின் றுணர்ந்தோன்**

பேராசிரியரின் மரபியல் - 94 - ஆம் நூற்பாவின் உரையிலும் கூறுவதில் இருந்து அறியலாம்.

இந்நூல் பன்னிரண்டு படலங்களை உடையதாகும். அவை

1. வெட்சி, கரந்தை வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, திணைகள் திணைகளின் இலக்கணத்தையும், துறையின் வகையினையும் எடுத்துக் கூறுகிறது.
2. பொதுவியல் திணை மட்டும் நான்கு பகுதிகளை உடையதாகும்.
3. கைக்கிளையும், பெருந்திணையும் ஆண்டாற் கூற்று பெண்பாற் கூற்று என்னும் இரண்டு பகுதிகளை உடையதாகும். ஒழிபுப் பகுதியில் ஒரு நூற்பாவையும், புறம், புறப் புறம் விளங்கும் ஒரு நூற்பாவாகவும் 19 நூற்பாக்களையும் 341 கொளுக்களையும், 341 வெண்பாக்களையும் உடையதாகும்.

ஆரம்பத்திலும் திணையின் ஒவ்வொரு இலக்கணமும், படலத்தின் வகையும் விளக்கப்பட்டிருக்கும். அதனைத் தொடர்ந்து கொளு இடம் பெறும் கொளு என்பது வெண்பாவின் கருத்தியலை சிறப்பாக விளக்கும் நூற்பாவாகும்.

**'வென்றி வேந்தன் பணிப்பவும் பணிப்ப இன்றியும்**
**சென்று இகல் முனை ஆ தந்தன்று'**

வெட்சித்திணையின் கொளு இதுவாகும்.

**“வாடா வஞ்சி தலை மலைந்து**
**கூடார் மண் கொளல் குறித்தன்று”**

*வஞ்சித்திணையின் கொளு இதுவாகும்.*

**“வேம்சின மாற்றான் விடுதர வேந்தன்**
**காஞ்சி சூடிக் கடிமனை கருதின்று’**

*காஞ்சித்திணையின் கொளு இதுவாகும்.*

*நூற்பாவின் பொருளைக் கொளுவும் கொருவின் முழுப் பொருளையும் வெண்பாக்கள் மூலம் விளக்கிக்களும் அமைப்பியல் முறையைப் பிற்காலத்தில் தோன்றிய ‘கோவை’ என்ற சிற்றிலக்கிய வகைப் பின்பற்றியுள்ளது.*

## 1. வெட்சித் திணை

*பண்டைய தமிழ் மரபில் போர் தொடங்குவதின் முதல் நிலையே ஆநிரைக் கவர்தல் ஆகும்.*

* *வெட்சித் திணை 19 துறைகளை உடையதாகும்*
* *ஒரு நூற்பாவும் 20 கொளுக்களும் 20 வெண்பாக்களையும் உடையது.*
* *20 கொளுக்கள்*

**“வென்றி வேந்தன் பணிப்பவும் பணிப்பு இன்றியும்**
**சென்று இகல் முனை ஆ தந்தன்று**

*என்ற கொளு திணையை விளக்கும் இரண்டு வெண்பாக்கள் திணையை விளக்கிக் கூறும்.*

## 2. கரந்தைத் திணை

*ஆநிரை மீட்டல் கரந்தைத்திணை ஆகும்*

* *கரந்தைத் திணை 13 துறைகளை உடையதாகும்*
* *ஒரு நூற்பாவும், 14 கொளுக்களும் 14 வெண்பாக்களையும் உடையது.*
* *பதினான்கு கொளுக்களுள்*

**“மலைத்து எழுந்தோர் மறம் சாயத்**
**தலைக் கொண்ட நிரை பெயர்த்தன்று”**

*என்ற கொளுவும் திணையை விளக்கும். ஒரு வெண்பாவும் திணையை விளக்கும்.*

### 3. வஞ்சித்திணை

*பகையரனின் நாட்டைக் கவர்வதற்காக படையெடுத்துச் செல்லுதல் வஞ்சித் திணையாகும்.*

* *வஞ்சித்திணை 20 துறைகளை உடையதாகும்.*
* *ஒரு நூற்பாவும் 25 கொளுக்களும் 25 வெண்பாக்களையும் உடையதாகும்.*
* *இருபத்தைந்து கொளுக்குள்*

**"வாடா வஞ்சி தலை மலைந்து**
**கூடார் மண் கொளல் குறித்தன்று"**

*என்ற கொளு திணையை விளக்கும் ஒரு வெண்பா திணையை விளக்கும்.*

### 4. காஞ்சித் திணை

*படையெடுத்து வரும பகையரசனை எதிர்ப்பதற்காகப் புறப்பட்டுச் செல்லுதல் காஞ்சித் திணையாகும்.*

* *காஞ்சித் திணை 20 துறைகளை உடையதாகும்*
* *ஒரு நூற்பாவும், 25 கொளுக்களும், 25 வெண்பாக்களையும் உடையதாகும்.*
* *இருபத்தைந்து கொளுக்களுள்*

**"வேம் சின மாற்றான் விருதா வேந்தன்**
**காஞ்சி சூடிக் கடிமனை கருதின்று"**

*என்ற கொளு திணையை விளக்கும் ஒரு வெண்பா திணையை விளக்கும்.*

### 5. நொச்சித்திணை

*கரந்தையரசன் தன் மதிலைப் பாதுகாத்துக் கொள்ளுதல் நொச்சித் திணையாகும்*

* *நொச்சித்திணை 8 துறைகளை உடையதாகும்*
* *ஒரு நூற்பாவும் 9 கொளுக்களும் 9 வெண்பாக்களையும் உடையதாகும்.*
* *ஒன்பது கொளுக்களுள்*

**"எப்புழை ஞாயில் ஏந்துநிலை அரணம்**
**காப்போர் சூடிய பூப் உரைத்தன்று"**

*என்று கொளு திணையை விளக்கும் ஒரு வெண்பாவும் திணையை விளக்கும்.*

## 6. உழிஞைத் திணை

*பகையரசனின் மதிலை வளைத்து நின்று போர் செய்தல் உழிநைப் படலமாகும்.*

- *உழிஞைதத் திணை 28 துறைகளை உடையதாகும்*
- *ஒரு நூற்பாவும் 28 கொளுக்களும் 28 வெண்பாக்களையும் உடையதாகும்.*
- *இருபது கொளுக்களுள்*

**“முடிமிசை உழிஞைசூடி ஒன்னார்**
**கொடி நுடங்கு ஆர்எயில் கொளக் கருதின்று”**

*என்ற கொளு திணையினை விளக்கிக் கூறும்*

## 7. தும்பைப் படலம்

*இரு பெரு வேந்தர்களும் போர் செய்தல் தும்பைத் திணையாகும்.*

- *தும்பைத் திணை 23 துறைகளை உடையதாகும்.*
- *ஒரு நூற்பாவும் 28 கொளுக்களும் 28 வெண்பாக்களையும் உடையது.*
- *இருபத்தெட்டுக் கொளுக்குள்*

**“செங்களத்து மறம் கருதிப்**
**பைந்தும்பை தலை மலைந்தன்று”**

*என்ற கொளு தும்பைத் திணையின் இலக்கணத்தையும், வகையினையும் விளக்கிக் கூறும்.*

## 8. வாகைப் படலம்

*பகையரசனைப் போரில் வெற்றிக் கொள்ளுதல் வாகைப் படலமாகும்.*

- *வாகைப்படலம் 32 துறைகளை உடையதாகும்*
- *ஒரு நூற்பாவும் 34 கொளுக்களும், 34 வெண்பாக்களையும் உடையது.*
- *முப்பத்தி நான்கு கொளுக்கள்*

**“இலைபுனை வாகை சூடி இகல் மலைந்து**
**அலைகடல் தாணை அரசு அட்டு ஆர்த்தன்று”**

*என்ற கொளு திணையின் இலக்கணத்தைத் தெளிவர எடுத்துக் கூறும்.*

## 9. பாடாண்

*பாடப்படும் ஆண்மகனின் வீதம், வெற்றி, கொடை, புகழ் முதலியவற்றை சிறப்புறச் சொல்வது பாடாண் படலமாகும்.*

- *பாடாண் படலம் 47 துறைகளை உடையதாகும்.*
- *ஒரு நூற்பாவும் 51 கொளுக்களும், 51 வெண்பாக்களையும் உடையது.*
- *ஐம்பத்தொரு கொளுக்களுள்*

**'ஒளியும் ஆற்றலும் ஓம்பா ஈகையும்**
**அளியும் என்று இவை ஆய்ந்து உரைத்தன்று"**

*என்ற கொளு திணையின் இலக்கணத்தை எடுத்துக் கூறும்.*

## 10. பொதுவியல்

*புறத்திணையின் ஒன்பது படலங்களுக்கும் பொதுவானச் செய்திகளையும், அந்தப் படலங்களில் சொல்லப்படாத நிகழ்கவுகளையும் எடுத்துச் சொல்வது பொதுவியல் படலமாகும்.*

- *பொதுவியல் 4 பகுதிகளையும் (பொதுவியல் சிறப்பின் பொதுவியல், காஞ்சிப் பொதுவியல், முல்லைப் பொதுவியல்,) ஆகியவற்றையும், நான்கு நூற்பாக்களையும் உடையதாகும்.*
- *பொதுவியல் படலம் 39 துறைகளை உடையது.*
- *பொதுவியல் படலம் 45 கொளுக்களையும் 45 வெண்பாக் களையும் உடையதாகும்.*

## 11. கைக்கிளைப் படலம்

*கைக்கிளை என்பது ஒரு தலைக் காமம் ஆகும்.*

- *கைக்கிளைப் படலம் ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூற்று என்னும் இரண்டு பகுதிகளை உடையதாகும்.*
- *கைக்கிளைப் படலம் இரண்டு நூற்பாக்களையும் 19 துறைகளையும் உடையதாகும்.*
- *கைக்கிளைப் படலம் 21 கொளுக்களும், 21 வெண்பாக் களையும் உடையதாகும்.*

## 12. பெருந்திணை

*பெருந்திணை என்பது பொருந்தாக்காமம் ஆகும்*

* *பெருந்திணைப் படலம் ஆண்பாற் கூற்று இருபால் பெருந்திணை என்ற இரண்டு பகுதிகளை உடையதாகும்.*
* *பெருந்திணைப் படலம் 2 நூற்பாக்களையும் 36 துறைகளையும், 37 வெண்பாக்களையும் உடையதாகும்.*

## 13. ஒழிபு

*ஒழிபுப் பகுதியில் பாடாண் படலத்திலும் வாகைப் படலத்திலும் கூறப்படாத செய்திகளைப் பற்றியும், புறத்துறைகளைப் பற்றியும் எடுத்துக் கூறுகிறது.*

* *ஒழிபு ஒரு நூற்பாவையும் 19 வெண்பாக்களையும் உடையதாகும்.*
* *பிற இலக்கண நூற்களில் கூறப்படும் ஒழிபியல் போன்ற பகுதியாகும். இந்த ஒழிபில் கொளுக்கள் கூறப்படவில்லை.*
* *நூலின் இறுதியில் புறத்திணைப் பாகுபாடு என்ற பகுதியில் புறத்திணை பற்றியும், புறப்புறம் பற்றியும் எடுத்துக் கூறுகிறது.*
* *புறத்திணை : வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிநை, நொச்சி, தும்பை*
* *புறப்புறம் : வாகை, பாடாண், பொதுவியல் என்றும் பகுத்துக் கூறுகிறது*
* *நூற்றளவில் கூறப்படாத கைக்கிளையும், பெருந்திணையும் அகப்புறமாகும்.*